# நினைவலைகள்

## காயம், கடல், வெளிச் சமர்

எமது அணிகள் எதிரியைத் தாக்குவதற்கென உப்பளம் சுற்றுலா விடுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. எமக்கு வழிகாட்டியவாறு ஒரு போராளி முன்னுக்குச் சென்றுகொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து எங்கள் குழுக்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. மேலே விமானங்கள் குண்டுகளை வீசியபடி... கீழே எறிகணைகளும் ரவைகளும்... இத்தனைக்கும் மத்தியில் போய்க்கொண்டிருந்த போது, எம்மில் யாரோ ஒருவருடைய கையிலிருந்த மின் ஒளிர்விளக்கு (ரோச் லைற்) ஒளிர்ந்ததை, மேலே சுற்றிய வேவுவிமானம் கவனித்திருக்க வேண்டும். குண்டுவீச்சு விமானம் ஒன்று எம்மைநோக்கிக் குண்டுகளை வீச ஆரம்பித்தது. இத்தாக்குதலில் வழிகாட்டியின் முகத்தில் காயம் ஏற்பட்டது. ஆனாலும், அவர் எம்மை எமக்குரிய இடம்வரை கூட்டிப்போனார்.



குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், நாம் முன்னே இறங்குவதற்குத் தயாராகினோம். எமது குழு ஒன்றும், ஆண் போராளிகளின் குழு ஒன்றும் முதலில் இறங்கியது. எதிரியின் பலமான தாக்குதலின் மத்தியிலே நாம் முன்னேறினோம். பலர் காயம் அடைந்தார்கள். பலரை நாம் இழந்தோம். ஆனாலும், நாம் எவ்வளவு தூரம் முன்னேற முடியுமோ, அவ்வளவு தூரம் வரை முன்னேறினோம்.

இந்நேரம் எமக்கு முன்னால் போன குழுவின் வோக்கி, எமக்குரிய இலக்கு எம்மால் கைப்பற்றப்பட்ட செய்தியை அறிவித்தது. இராணுவத்தினர் பின்வாங்கி உள்ளே ஓடிவிட்டார்கள். ஏனையோர் எமது தாக்குதலுக்கு ஆளாகி இறந்து போனார்கள்.

இதன்போது, மிகவும் சிக்கலான நிலை எமது பெண் போராளிகளின் குழுக்களில் ஒன்றுக்கு ஏற்பட்டது. எதிரியிடமிருந்து எப்பக்கத்தாலும் தாக்குதல் வரக்கூடிய இடத்தில் அந்தக் குழு நின்றது. நல்ல வெளியான இடம். அப்படியிருந்தும், எமது தாக்குதலை நாம் நிறுத்தவில்லை. சிலரது குழுக்கள் தாக்கிக்கொண்டிருக்க, முன்னே சென்ற குழுக்களில் இழப்புக்கள் ஏற்பட,



ஏனைய குழுக்களும் முன்னேறத் தொடங்கின. இத்தனை சிக்கல்களுக்கும் பேரிழப்புகளுக்கும் மத்தியில்தான் நாம் சுற்றுலா விடுதியைக் கைப்பற்றினோம்.

அடுத்தநாள் இயக்கச்சிப் பக்கமாக எமது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதன் பின்னர், இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிக் கடற்கரைகளில் கடற்படகுகள் மூலம் மேலதிக துருப்புகள் தரையிறங்கின. அவர்கள் மீது எங்களது அணிகள் தொடர்ச்சியாகத் தாக்கிக்கொண்டிருந்தன. இதில் மார்கிரட்டின் அணிதான் எல்லோருக்கும் முன்னே நின்றது. இந்தச் சண்டையில் அவர் வீரச்சாவடைந்தார். பலர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து பின்னே நின்ற எமதணிகள் சில முன்னே வர, முன்னே நின்ற அணிகள் பின்னே அழைக்கப்பட, சண்டை தொடர்ந்தது.

**தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...**

---

ஆனால், எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியிலும் விடாப்பிடியாக நின்று, 1989 இன் நடுப்பகுதியில் தன்னை இயக்கத்துடன் இணைத்துக்கொண்டாள்.

பயிற்சிக் காலத்தின்போது ஒரு நாள், இவளை "மரம்தூக்கி வாருங்கள்" என்று பயிற்சியாளர் சொன்னபோது,
"ஏன்? நான் உங்களுக்கு மரம் தூக்கவே வந்தனான்? றெயினிங் எடுக்கவல்லவோ வந்தனான்" என்று கேட்டவளிடம்,
"இதுவும் பயிற்சிதான் அமரா. எங்களுக்குத் தேவையானதை நாங்கள்தான் தூக்கிவரவேணும் என்றதும், "சரி தூக்கிவாறன்" என்றுவிட்டு, மரத்தைத் தூக்கி வந்தாள். இந்தத் துடுக்குத்தனமும் சிறுபிள்ளைத்தனமுமான பேச்சும் இறுதிவரை இவளுடன் கூடவே இருந்தவை.

"எனக்கு ஒரு ஆயுதமும் வேண்டாம். ரெண்டு குண்டு தாங்கோ. குண்டோட போய்ச் சண்டையில் நின்று, எனக்கு ரீ 81 எடுக்கிறன்".
என்று தன்னம்பிக்கையோடு கூறினாள்.

இறுதியாக ஆனையிறவு அடிபாட்டின் போதும்,
"ஆமி கட்டாயம் ஓடுவான். என்ரை கையால் ஆயுதம் எடுத்து, அண்ணைக்குக் குடுப்பன்" என்று சொல்லிக்கொண்டு, அதே கனவோடுதான் விசேட பயிற்சியையும் பெற்றுக்கொண்டாள். சண்டைக்கும் போனாள். உல்லாசவிடுதி மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்தாள்.

### கப்டன் லக்சி



பலாலி இராணுவத்தளத்தைக் காவல்காத்தவேளையில், தனது பொறுப்பில் விடப்பட்ட எல்லாக் காவல் அரண்களுக்கும் மாறிமாறிச் சென்று, போராளிகளை உற்சாகப்படுத்தி, காவலைப் பலப்படுத்திக்கொண்டிருப்பாள். அடிக்கடி எதிரி அரண்களை இரகசியமாக நெருங்கி, அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இராணுவத்தினரை எந்த நேரமும் பதற்றத்திற்குள் வைத்திருப்பாள்.

இவ்விதமாக லக்சியின் அணி நகர்ந்துசென்று, இராணுவத்தின் மீது தாக்குதலை நடத்தும். ஒரு கட்டடத்துள் ஒருநாள், இவர்களுக்குத் தெரியாமல் இராணுவத்தினர் வந்து, தூரக்கட்டுப்பாட்டில் இயங்கும் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுச் சென்று விட்டார்கள்.

அடுத்தநாள் லக்சி வழமைபோலவே தன்னுடன் இரு போராளிகளையும் அழைத்துக்கொண்டு கட்டடத்திற்குக்கிட்டே போனவள், சந்தேகம் அடைந்து கவனமாகச் சென்றபோது, ஒரு வயர்த்துண்டு கண்ணில்பட்டது. உடனடியாகவே வயரைக் கத்தரித்து, புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளையும் எடுத்துக்கொண்டு, எமது அரணுக்கு வந்துவிட்டாள். இவளுடைய துணிகரமான செயற்பாடுகளுக்கு இது உதாரணமாகும்.

வீட்டுக்கு விடுமுறையிலே போய் வருமாறு எத்தனையோ தடவை சொன்னபோதும், "ஆனையிறவுச் சண்டை முடியப்போறன்" என்றாள்.

ஆனாள்...

சண்டை ஓய்ந்தபோது அவளில்லை.

### கப்டன் திலகா

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு மோதலின் கடைசிக்கட்டம். திலகா தனது அணியுடன் களம் புகுந்தாள். அகிலன் வெட்டையில் நின்ற இராணுவம் ஆனையிறவை நோக்கி முன்னேறத் தொடங்கியது. புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும்மோதல்



வெடித்தது. இராணுவம் அங்குலம் அங்குலமாக (எம்மிடம் அடிவாங்கியபடி) முன்னேற முயன்றது. இராணுவத்தினரின் நகர்வுகளுக்கு ஏற்றவகையில் திலகா தனது அணியின் வியூகங்களை மாற்றி, மாற்றியமைத்து போரிட்டுக்கொண்டிருந்தாள். இராணுவத்தரப்பில் பலரை நாம் வீழ்த்தியபோதும், எம்பக்கமும் இழப்புக்கள் அதிகமாகவே இருந்தது. களத்தில் நிற்கும் எம்மவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனாலும், இராணுவத்தினரது நகர்வு தடுக்கப்படவேண்டும். திலகா உடனேயே தொலைத்தொடர்புசாதனம் மூலம் தனது குழுவின் அணித்தலைவர்களை அழைத்தாள்.
"முன்னுக்குப் போங்கோ, சளைக்காமல் அடிபடுங்கோ, வீரமரணமடைந்த ஒவ்வொரு போராளியையும் மனதில நினைச்சுக்கொண்டு போங்கோ, போய் அடிபடுங்கோ", என்று திரும்பத் திரும்பச்சொல்லி தன் குழுவை உற்சாகப்படுத்திக்கொண்டு சண்டைக்குத் தலைமை தாங்கினாள். சண்டையும் தீவிரமடைந்தது.

இராணுவத்தினரின் துப்பாக்கி ஒன்றிலிருந்து புறப்பட்ட ரவை திலகாவைத் துளைத்துச்சென்றது. தரையில்படாமல் பறப்பது போல் ஓடுகின்ற, திருமலை மண்பெற்ற அந்தத் தவப்புதல்வி அந்தப் பெருமணல் வெளியிலே சாய்ந்தாள்.

அரை மயக்கத்திலிருந்தபோதும் அவள் வாய்; "செத்த ஒவ்வொரு போராளியையும் நினையுங்கோ. போய் அடிபடுங்கோ", என்றே கட்டளை இட்டுக்கொண்டிருந்தது.